1978 செப்டம்பர் 9] [பேரவைத் தலைவர்[

In Practice and Procedure of Parliament by Kaul and Shakdher, it has been stated 'speeches or writings containing vague charges against members or criticising their parliamentary conduct in a strong language particularly in the heat of a public controversy, without, however, imputing any *mala fides,* are not treated by the House as a contempt or breach of privilege.

இருந்தாலும் ஒரு உறுப்பினர் பொது மேடையில் என்ன பேசினாலும் மற்ற உறுப்பினர்களின் மனம் புண்படும்படி அல்லது அவர்களுக்கு வருத்தம் ஏற்படக்கூடிய அளவில் பேசாமல் இருப்பது நல்லது. ஆகவே, அவர்கள் எழுப்பியுள்ள அவை உரிமை மீறல் பிரச்னையை உன்னிப்பாகக் கவனித்தால் அது உரிமை மீறலாகத் தெரியவில்லை. ஆகவே இதை நான் தள்ளுபடி செய்கிறேன்.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : பொது மேடைகளில் பேசுகிற பேச்சுக்களின்மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வர அனுமதித்தால் தினந்தோறும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தரக் கூடாது என்று விதிகளைக் காட்டினால் நான் திருத்திக்கொள்கிறேன்.

(4) அறிவிப்பு.

(மதுரை) காமராஜ் பல்கலைக்கழக பேரவைக்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காமராஜ் பல்கலைக்கழகப் பேரவையில் (செனட்) இச்சட்ட பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) எஸ். பாலகிருஷ்ணன் (2) ஆர். முத்தையா (3) பி. இராமதாஸ், (4) அ. ரகுமான்கான் ஆகியோரின் பதவிக் காலம் 30 – 10 – 1978-ம் நாளுடன் முடிவடைவதால், பல்கலைக்கழக பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, காமராஜ் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக்கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (ப்ரப்போர்ஷனல் ரெப்ரஸென்டேஷன்) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 11-9-78 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் சட்ட மன்ற பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் செயலாளரிடமிருந்து

பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 11 – 9 — 78 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 12 – 9 – 78 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 14 – 9 – 78 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(5) அறிக்கை அளித்தல்.

விதி 82-ஏ இன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 4 – 3 – 1978 அன்று உடுக்குறியிட்ட வினு எண். 385 விடையளிக்கையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சந்திரன் கேட்ட துணை வினாவிற்கு, முன்னாள், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் "தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டத் திருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்" என்று பதிலளித்தார். அதனை "கூட்டுறவுச் சட்ட திருத்தங்களை ஆராய்வதற்கும் அவற்றில், தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் தனி ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். திரு. பழனி என்பவர் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. திரு. பழனி என்பவர் அரசு அனுமதித்த பல்வேறு பதவியாளர்களில் ஒரு இணைப் பதிவாளரின் பதவியில் அமர்த்தப்பட்டார்" என்று திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி கேட்ட வினாவிற்கு "சட்ட திட்டங்கள் திருத்தக் குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்" என்று முன்னாள் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பதிலளித்தார். இச்சொற்றொடருக்குப்பதிலாக "சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்" என்ற சொற்றொடரை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.